[illegible]

[illegible]

C

3

Q23:417
N25.
18167j

உ

ஓம் சிவாய நமஃ

வேலும் மயிலுந் துணை.

அருணாசலம் என்னுந்

திருவண்ணாமலையின்

மகாத்மியமாகிய

# தீபதெரிசனம்.



இஃது

மதுரை அஷ்டலக்ஷ்மி விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

1925௵

[illegible]தன் விலை அணா $2\frac{1}{2}$.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No. 10 AUG 1927
MADRAS

Q23:417
X125
181671

உ

ஓம் சிவாய நமஃ

வேலு மயிலுந் துணை.

அருசணுலம் என்னுந்

திருவண்ணுமலையின்

மகாத்மியமாகிய

# தீபதெரிசனம்.

இஃது

மதுரை அஷ்டலக்ஷ்மி விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

1925 ஞு

இதன் விலை அணு $2\frac{1}{2}$.

129.181



ஸ்ரீ அருணாசலேசுவரர்.

உ

ஓம்.

பரப்பிரஹ்மணே நமஃ

# முகவுரை.

தாயுமான சுவாமிகள்:—

மூர்த்திதலந் தீர்த்தமுறையாய்ப் பணிந்தவர்க்கு
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

பிரஹ்மானந்த வாரிதியாயும், பிரபாவம் பொருந்தியதாயும், பிரஹ்மாண்டமாகிய சராசரங்களின் பிறப்புக் குகந்ததாயும், வேதாந்த சித்தாந்தங்களின் விசேட பூஷணமாயுமுள்ள, மஹாத்மாவாகிய பரமேசுரன், இவ்வுலகின்கண்ணே திருக்கோயில் கொண்டருளிய பலதலங்கட்கும், சிரோபூஷணமாக விளங்குகின்றதூம், ஒப்பற்றதுமாகிய அருணாசலம் என்னுந் திவ்யக்ஷேத்திரத்தில் புராதனமாக நடைபெற்று வருகின்ற கார்த்திகை தீப தெரிசனார்த்தமாக இப்புவனத்தின் நாலு பக்கங்களிலுமிருந்து பக்தகோடிகள் தேனிசைந்த மதுகரங்கள்போன்று திருமலையைச்சூழ்ந்து சிந்தைகனிந்து சென்னிகை கூப்பித் தெரிசனம்புரிந்து திருவருட்செல்வம்பெற்று விளங்குகின்ற தன்மை அன்பர்கள் அறியாததல்ல,

நினைக்கமுத்தி பயப்பனவாகிய அந்தஸ்த்தலத்தில் பார்வதி சமேதராகிய பரமேசுரன் மலைவடிவமாயும், ஜோதிவடிவினராயும், சிவலிங்க மூர்த்தமாயும். எழுந்தருளியிருப்பதுபற்றி, விசேடம் பொருந்த விரித்துரைக்கின்ற மகாத்மியமாகிய ஸ்த்தலப் புராணத்தின் பகுதிகளிலிருந்து மேற்கண்ட விஷயங்களைத் தெரிந்தெடுத்து தீபதெரிசனம் என்னுஞ் சிறு புத்தக ரூபமாக அச்சியற்றுவித்ததானது அன்பர்கள் பொருட்டேயாகும்.

உலகின்கண்ணே சைவசமயத்தின் சாரமாகிய பக்தியென்னுங் கனிந்த பழஞ்சுவையைப்பரிந்தளிக்க அவதரித்த பரமஹம்ஸர்களாகிய தெய்வீகம் பொருந்திய சமயாச்சாரியர்களும் ஸ்ரீ சுப்ரமண்ய வரப்ரசாதியாகிய மகான் அருணகிரி சுவாமிகளும் இன்னும் ஏனைய மகான்களும் திருவண்ணாமலையாகிய இத்தலமகத்துவம்பற்றிச் செப்பிய பாசுரங்களிற் சிலவைகளைஎடுத்து பரவசமொடுபாடும் பக்த சிகாமணிகளின் பண்பிற்கிசைந்ததாக வின்னூலிற் சேர்வை செய்யப்பட்டிருக்கின்றவாதலால் யாவரும் இலகுவிற்பெற்று ஆனந்திக்குமாறு பிரார்த்திக்கின்றனம்.

மு. வீ. வேலாயுத தாஸன்
திருச்சுழியல்.

சிவமயம்.

# திருவண்ணாமலைத்

# தீபதெரிசனம்.

ஓம் மஹா கணபதியே நம:

## அருணாசலப்புராணம் ஸ்தலமகிமை.

### அறுசீரடியாசிரிய விருத்தம்.

இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சைய ரிமையவரெண்டிசையோ
ருரகருந்தவர் முனிவரர் பங்கையருவண நெடுங்கொடியோர்
பரவிநெருங்கலினுலக நிறைந்தவர் பணியுமிடங்கிடையா
தாகாவென்பது கடலின் முழங்கிய தருணைவளம்பதியே.

ஸ்ரீ அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சுயம்ப்பிரகாசப் பொருளாக விளங்கும் ஸ்ரீ கைலாசபதியானவர், இந்த உலகின்கண் ஆங்காங்கு வசிக்கும் ஆன்மகோடிகளொவ்வொன்று முய்யும பொருட்டுத் திருவருட் கண்சுரந்து திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல ஸ்தலங்களுள் ஒன்றாகியும், ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்மந்த சுவாமிகளாலும், ஆளுடைய வரசுகளாகிய திருநாவுக்கரசு சுவாமிகளாலும், பதிகம பெற்றுள்ளதாயும், ஆளுடைய வடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளால் திருவெம்பாவை, திருவம்மானை, பாடியருளியதும், பட்டினத்துச் சுவாமிகளது வீரியத்தாற்றிருவவதாரஞ் செய்தருளி, திருப்பரங்குன்றம், திருச்செந்தில், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை, குன்றுதோராடல், முதலிய பல திவ்யக்ஷேத்திரங்களில் விளங்கானின்ற ஸ்ரீ சாக்ஷாத் சுப்பிரமணியக் கடவுளின் கடாக்ஷம்பெற்றுச் சிங்கைக்குமினிக் குஞ் செந்தமிட்தேமாரி யென்னுந் திருப்புகழ் முதலிய பாசுரங்கள்பாடிய மகான் அருணகிரிநாத சுவாமிகள் பிறப்பிற்குரியவிடமாயும், சோழதேச முதலான தேசங்களில் இன்னின்ன நாட்டில் இத்தனை ஸ்தலங்களென்று முன்னோர்களாகிய அறிவுடையோர்களேற்படுத்தின கிரமப்படியே மகதநாடு அல்லது நடுநாட்டுக்குள்ளிருக்கும ஸ்தலங்களுள் விசேடமாகிய திருவண்ணாமலை யென்னுந் திவ்யக்ஷேத்திரமானது. கிரேதாயுகத்தில் அக்கினிமலையாகவும, திரேதாயுகத்தில சுவர்னமலையாகவும், துவாபரயுகத்தில் தாம்பிரமலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவும், திருவுருக்கொண்டு, அருணாசலம, சோணாசலம் கௌரிநகரம், தேசுநகரம, முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம், என்று இவ்வாறு பல திருநாமங்களுடையதும், ஆன்மகோடிகளை இடைவிடாது இரக்ஷிக்குஞ் சிவபெருமானே கிரிரூபமாயிருப்பதும், பார்பதி தேவியார் திருவவதாரமானதும், திருக்கண்புதைத்ததும், மகிடாசுர

மர்த்தனஞ்செய்ததும், இடப்பாகம் பெற்றதும், சந்திரவம் சத் கிய வல்லாளராசன புத்திரசோகந்தீர்ந்ததும் இந்திர தீர்த்த முதலான அனேக தீர்த்தங்களும், அன்பர்கள் திருமலை வலம்புரிதலும், ஆதித்தனுக்குத் தெரிசனங் கொடுத்ததும், சூரியவம் சத்தனாகிய பிரதத்தராஜனால் அநேக காணிக்கைகள் பெறப்பெற்றதும், அஷ்டவசுக்களும் பிரமன் முதலானவர்கள் பாவந்தீர்ந்ததும் புளகாதிபன் பேறு பெற்றதும், நினைக்கமுத்திதரும் தலமென்பதும் ஆகம புராணத்திற் சொல்லப்படுகின்றன.

---

### பரமசிவம் அக்கினி மலையாக எழுந்தருளியிருந்த தின்காரணம்

### அருணாசலப் புராணம்.

அறுசீரடியாசிரியம்.

நடுக்கமுறு முனிவரெலாமமரரெலாம் பயந்தவிர நாகமீது
படுகளைபுரி திருமாலும் பங்கயத்திலுறுமயனும் பகைமைதீர
வடுக்கியிடும் புவனமெலா மடுக்கழியா திருக்கமனத் தருள்வதாகித்
தடுக்கரியதழலுருவத்தொருவரையா யிருவரையுந்தடுப்பதானான்.

ஒரு கற்பத்தில் மகா விஷ்ணுவும், பிரமதேவனும் தாம் தாம் பிரமமென்று வாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமான் அழற்றூணாய் (அடிமுடியறிய முடியா அக்கினிமலையாய்) அவர்கள் மத்தியில்நின்று கலக்கத்தைத் தீர்த்து அனுக்ரஹித்து அவர்கள் வேண்டுதலினால் ஒரு சிறிய மலையாயுருக்கொள்ள, அதைக் கண்ட பிரமதேவனும், மகா விஷ்ணுவும் சுவாமியைநோக்கி இம்மலையினுச்சியில் ஒரு ஜோதி என்னாளுந்தெரியும்படிக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமானவர் வாரீர் பிரமவிஷ்ணுக்களே, கார்த்திகை மாதத்தில்வருங் கார்த்திகை நக்ஷத்திரத்தில் இம்மலையினுச்சியின்கண் ஒரு ஜோதி காண்பிப்போம். அச்சோதியைத் தரிசித்தவர்கள் மிடியும் வியாதியும் நீங்கி இஷ்டகாமியங்களைப்பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களுந் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும், இதைத் தொழுதவர்களுக்கும், தரிசித்தவர்களுக்கும், அவர்மட்டில்லாமல் அவர்களுடைய கோத்திரத்தில் இருபதொரு தலைமுறைக்கும் மோக்ஷங்கொடுப்போம் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

---

## கார்த்திகை தீப விசேடம்.

### அருணாசலப் புராணம்.

கார்த்திகைக்குக் கார்த்திகை நாளொரு சோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிபிணியில்லா
துலகில் மன்னிவாழ்வார்

பார்த்திவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு தவிரு
மிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருப்பத்தோர் தலைமுறைக்கு
முத்திவாங் கொடுப்போ மென்றார்.

மேலும் இம்மலை ஜெனனமரணமென்னும் வியாதிக்கு மருந்து போலயிருப்பதினால் மலை மருந்தென்றும் அழல்வண்ணமாயிருப்பதனால் அருணாசலமென்றும், பெயருள்ளது இதை ஒருதரஞ்சொன்னவர்களுக்குப் பஞ்சாக்ஷரத்தைத மூன்றுகோடிதரம் உச்சரித்த பலன் வருமென்பதையும் அருளிச் செய்தார்.

அதற்குப் பிரமதேவனும் மகா விஷ்ணுவும் ஆனந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத் தேவரீர இவ்வாறு மலைசோலமாயிருந்தால் அடியேங்கள் யெப்படிப் பூசிக்கக்கூடும். ஆகையால் இந்த மலையின்கீழ் ஒரு சிவலிங்க மூர்த்தியா யெழுந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சிவபெருமான் அவ்வாறே சிவலிங்கமூர்த்தமாகின்றோமென்று அந்த மலையினுள்ளே மறைய உடனே அம்மலையினடிவாரத்தில் ஓர் சிவலிங்கந்தோன்றியது. அதைக்கண்டு பரமானந்தமாய் மயனென்னுந் தேவதச்சனால் ஓராலயம் கட்டுவித்தார்கள். அப்போதவ்விடத்தில் வளப்பம் பொருந்திய நகரமும் மூன்னூறு தீர்த்தங்களுமுண்டாயின. அல்லாமலும் ஆகாயகங்கை இணறுகளாகவும், கற்பக விருக்ஷங்கள் மரங்களாகவும் வந்திருந்தன தேவர்களும் ரிஷிகளும் மனிதர்களாகவந்துபிறந்தார்கள். அரம்பாஸ்திரிகள் தாசிகளாகப் பிறந்தார்கள்.

ஆகையால் மற்றெல்லாத் தலங்களும் உடலென்றும், அருணாசல ஸ்தலம் முகமென்றும், அதிற் சிவபெருமான கண்ணென்றும், இத்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற்கருமையென்றும் நமது பெருமானாகிய நந்திகேசுரர் மார்க்கண்டேய முனிவருக்கு அனுக்ரஹஞ்செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய பிரகாரம் அம்மலையின்மேல் கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நக்ஷத்திரத்தில் ஜோதி தரிசனையாகிக்கொண்டு வந்த பாவனையாக இப்போதும் அந்த மலையின்மேல் தீபதரிசனமாகின்றமையால் அத்தினத்தில் இந்திரதீர்த்த [illegible] தலாகிய தீர்த்தம்

களில் ஸ்நானம்செய்து கிரிவைவரும்வந்து தங்கடங்கள் சக்திக்குத் தக்கபடி அதிபக்தியுடன் தர்மங்களையுஞ்செய்து அருணாசலேசுரரைத்தொழுது தீபதெரிசனமுஞ்செய்து உள்டன்போடு துதிப்பவர்கள் அளவிலாச் சம்பத்தையு மோக்ஷத்தையுமடைவார்கள்.

இதன்றியும் ஆதிவாரத்தில் திரிகரண சுத்தியுடன் தீர்த்தமாடி அந்த மலையை யாதொரு சிந்தனையுமில்லாமல் நிர்மலமாய் வலஞ்செய்து தம்மாலியன்றவளவில் தர்மங்கள் செய்தவர்கள் சூரிய மண்டலத்தைப் பிளந்து சிவபதத்தைத் தமக்கு யிடமாகச்சேர்த்துக் சொள்வார்கள். சோமவாரத்தில் அருணேசயத்திற்குமுன் தீர்த்தமாடி ஈரவஸ்திரத்துடன் வலம் வந்தவர்கள தேவேந்திரனைப்போல் ஏழுலகத்தையும ஆண்டு சிவசாரூப்பியத்தையடைவார்கள். மங்களவாரத்தில் தீர்த்தமாடி யாருடனும் வாய்பேசாமல் சித்தத்தை சிவன்பாலிருத்தி வலம் செய்தவர்கள் தங்கள் வறுமையும், சங்கிலித்தொடர்போல் வருகின்ற ஏழுபிறப்பையும் நீங்குவார்கள். புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதக்ஷணம் செய்வோர்கள் நான்கு வேதங்களையும் ஆறுசாத்திரங்களையும், அறுபத்து நான்கு கலைகளையும் தெளிந்து முத்திக்கு நெருங்கினவராய்த் தேவர்களாவார்கள், குருவாரத்தில் வலம்வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழத்தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மேலாவார்கள் சுக்கிரவாரத்தில் வலஞ்செய்தவர்கள் விஷ்ணுபதத்தில் சேர்வார்கள். சனிவாரத்தில் வலம் வந்தவர்களுக்கு நவக்கிரகங்களும் பதிரோராமிடத்தில் நற்பலனைக் கொடுக்கும். சிவராத்திரியிலும வருஷப்பிறப்பிலும் ஐப்பிசி முதலாகிய மூன்றுமாசங்களிலும் வலம்வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமான பலன் சித்திக்கும்.

உருவந்தெரியாமல் சித்தருந்தேவரும் இத்திருமலையை யுள்ளன்புடன் வலஞ்செய்வதால் மற்றவர்கள் கிரிபிரதக்ஷணம் செய்யும் போது வாகனத்தின் மேலேறிக்கொண்டுவராமலும, போர்வைபோர்த்துக்கொள்ளாமலும் குடைபிடித்துக் கொள்ளாமலும் பாதரக்ஷை தொடுத்துக்கொள்ளாமலும் தாம்பூலம் தரியாமலும வேறொரு சிந்தனையுமில்லாமலும் மனதினால் வந்தனஞ்செய்து அருணாசலேசுரரையே சிந்தித்துக்கொண்டு மிகுந்த பயபக்தியுள்ளவர்களாயிருத்தல் வேண்டுமென்றும் அந்நாளில் விரதமிருந்து சிவதெரிசனஞ்செய்து ஆலயத்திற்குள்ளே போகின்றவர்களுள் அருகரல்லாதவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதிசைவாச்சார்யார்களைக்கொண்டு வில்வார்ச்சனை முதலானவைகளைச் செய்வித்தால் தங்கள் கையினாற்செய்த பேறு கிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொன்னார்.

# சர்வாலய தீப தெரிசனம்.

ஸ்ரீ கயிலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும்போது அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒரு தீபம் அணையுந்தருணத்தில் ஓரெலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப்போம்போது அவ்வெலியின் முகமானது அணைந்துபோகிற வர்த்தியைத்தூண்டிய மாத்திரத்தில் பிரகாசம் அதிகரித்ததினால் சிவபெருமான் கிருபைகூர்ந்து அவ்வெலிக்கு மானிடசரீரமும் அரசும், மற்றப்பேறுந்தந்து பூமியிற் பிறக்கும்படி கட்டளையிட்டனர். அவ்வெலியானது மாபலிச் சக்ரவர்த்தியாகப் பிறந்து சகல ஐஸ்வரியத்தையும் அனுபவித்திருக்கும் காலத்தில் ஒரு நாள் சிவதெரிசனத்துக்குப்போக எத்தனித்துத்தன் இராசசின்ன முதலிய சகல ஆடம்பரவைபவத்துடன் சிவாலயத்திற்குட் பிரவேசித்து பிரதக்ஷணம்செய்து வருகையில், அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபநெய்யின் ஓர் துளி இந்தச் சக்கரவர்த்தியின் தேகத்தில் ஒழுகினவுடன் அந்தச் சக்கரவர்த்தியின் தேகமுழுமையும் இரணங் கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு நாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து சக்கரவர்த்தியே; நீ மிகவும் அகங்காரியாகையால் உம்மாலுனக்கு இத்துன்பம் உண்டாயிற்று. நீ இன்றுமுதல் நல்லுணர்வுடன் நெய் முதலிய பொருள்களால் சிவாலயங்கட்குத் தீபமேற்றுவையானால் உமக்கு இந்த விரணந் தீர்ந்து சாயுச்சிய பதவி கிடைக்குமென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக் கேள்வியுற்ற அச்சக்கரவர்த்தியானவர் ஆனந்தமடைந்து அந்தக் கட்டளையின்படியே அன்று முதல் சிவாலயங்களிலும் மற்ற இருள் சூழ்ந்த அரணியங்களிலும் தீபம் ஏற்றிக்கொண்டு வருங்காலங்களில் ஒரு நாள் ஸ்ரீ கயிலாசபதியாகிய சிவபெருமான் திருவுளமிரங்கிக் கார்த்திகைமீ பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில தேசோன்மயமா யெழுந்தருளி அச்சக்கரவர்த்திக்கு சாயுச்சிய பதவியளித்தருளினார்.

அக்காலத்தில் சிவதெரிசனத்துக்கு வந்திருந்த் தேவர்களெல்லோரும் அச்சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உஷ்ணம் தணியும்பொருட்டு பொரிஅவல் நிவேதனம் செய்தார்கள். இவ்வாறு கயிலாசபதியாகிய சிவபெருமான் மாபலிச் சக்கரவர்த்திக்கு சோதி ரூபமாகத் தெரிசனங்கொடுத்த காரணமாக இன்னும் சிவாலயங்கள் தோறும் கார்த்திகை மாசப் பூர்வபக்ஷக் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம் வைக்கவும் சுட்கப்பனைகட்டவும ஆயிற்று:

உ

சிவமயம்.

## அக்கினி மலையின் பிரபாவங் கூறுதல்.

# அருணாசலப்புராணம்.

### கலி விருத்தம்.

வானக் கண்ணழ லாயது கண்ட மலரோனுங்
கானக் கண்ணனு மஞ்சிய கன்றார்கரைகாணார்
ஞானக் கண்ணினர் காணும தல்லானவை சேரு
மீனக்கண்ணினருக்கெளியானே வெம்மானே

### இதுவுமது.

### பரமசிவம் பிரமவிஷ்ணுக்களுக்கு வரமருளி தலவிசேட முரைத்தது.

### அறு சீரடியாசிரி விருத்தம்.

இத்தலத்திலுமக்குவரங்கொடுத்தலினால்யோசனைமூன்றெல்லை தூரம்
சுத்தபவித்திர ஞானத்தலமாகப் பொலிகவிந்தச் சோதி தானுஞ்
சித்துருவ மலையாகி வரமுதக் கடவதின் பஞ்சிறந்ததான
முத்தி தனைத்தகையா மனுதவுமிதற்கருணைபுரி மொழியுநாமம்.

இத்தலத்தில் பிரமசிவம் மலைவடிவினரென்பதுபற்றி
மகான் குரு நமசிவாய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

### வெண்பா.

கண்டங்கரிய மலைகண் மூன்றுடைய மலை
யண்டரெல்லாம் போற்றற்கரியமலை—தொண்டருக்கு
தோற்றுமலை நாளுந்தொழுவோரெழுபிறப்பை
மாற்றுமலையண்ணாமலை. க

அன்னமுடன் சொன்னமளிக்கு மலையாதரிப்போ
ருன்னுவர மெல்லாமுதவுமலை—துன்னுபுகழ்
கொண்டமலையங்கிக் கொழுந்தாகியண்டமுற
மண்டுமலையண்ணாமலை. உ

அன்பர் பிறப்பையகற்று மலையன்பரல்லா
வன்பர் பிறப்பை வளர்க்குமலை—பன்பை
வடிக்குமலை சிங்கத்தைவந்து சிம்புளாகி
யடிக்குமலையண்ணாமலை. ங

கார்த்திகைமீ கார்த்திகை நக்ஷத்திரத்தன்று மலையின் சிகரத்தில்த் தோன்றிவிளங்கும் பரமசிவ வடிவமாகிய தீபதரிசனத்தைக் குறித்து மேற்படி சுவாமிகள் பாடிய

வெண்பா.

கங்கையணி தீபங்கற்பூர தீபமலை
மங்கையொரு பங்கில் வளர்தீபம்—பங்கயன்மால்
விண்பாரு நேடும்வண மேவிய வண்ணாமலையிற்
பண்பாருங் கார்த்திகை தீபம். க

சீரார் சிறுத்தொண்டர் செல்வன்கறியுண்ணப்
பேராசைவைத்த பெருந்தீபம்—காரா
ரருணகிரித் தீப மனத்தல்லும் பகலும்
பாணிதர்பேர் கார்த்திகை தீபம். உ

போற்றுமடியார்க்கருளும் புண்ணிய தீபம் வினையை
மாற்றுமருந்தாகுமணித் தீபம்—சாற்றுமறை
யுன்னரிய சோணமலையோங்கி வளருந்தீபம்
பன்னரிய கார்த்திகை தீபம். ௩

---

உ

திருவண்ணாமலையில்.

திருஞான சம்மந்த சுவாமிகள் அருளிச்செய்த

# தேவாரப்பதிகம்.

பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழவதிரு
மண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ணமறுமே. க

தேமாங்கனிகடுவன் கொளவிடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளிசிதற
வாமாம்பிணையணையும் பொழிலண்ணாமலை யண்ணல்
பூமான்கழல்புனை சேவடிநினைவார் வினையிலரே உ.

பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ் கழைமுத்தஞ்
சூலிம்மணி தரைமேனிரை சொரியும் விரிசார
வாலிம்மழைதவழும் பொழிலண்ணாமலை யண்ணல்
காலன்வலிதொலை சேவடிதொழுவாரன புகழே ௩

உதிரும் மயிரிடு வெண்டலைகலனாவுலகெல்லா
மெதிரும் பலியுணலாகவுமெரு தேறுவதல்லான்
முதிருஞ்சடையிள வெண்பிறை முடிமேல் கொளவடிமே
லதிருங்கழலடிகட்கிட மண்ணாமலையதுவே. ௪

மாவஞ்சிலைதரளம் மிகுமணியுந்து வெள்ளருவி
யரவஞ்செய முரவம்படு மண்ணாமலையண்ண
லுரவஞ்சடையுலவும் புனலுடனாவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழலுமைபுல் குதல்குணமே. ௫

பெருகும்புனலண்ணாமலை பிறைசேர் கடனஞ்சைப்
பருகுந்தனை துணிவார் பொடியணிவாரது பருகிக்
கருகும்மிடறுடையார் கமழ்சடையார் கழல்பரவி
யுருகும் மனமுடையார்தமக் குறுநோயடையாவே ௬

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டி
னரியாடிய நகுவெண்டலையுதை யுண்டவையுருள
வெரியாடிய விறைவர்க்கிடமின வண்டிசைமுரல
வரியாடிய கண்ணாளொடு மண்ணாமலையதுவே. ௭

ஒளிறூபுலியதளாடையனுமையஞ் சுதல்பொருட்டாற்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித்துரித்து
வெளிறுபட விளையாடிய விகிர்தன்னி ராவணனை
யளறுபட வடர்த்தானிட மண்ணாமலையதுவே. ௮

விளவார்கனிபட நூறியகடல் வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறைகேடில் புகழோனு
மளவாவண மழலாகிய மண்ணாமலையண்ண
றளராமுலை முறுவலுமை தலைவன்னடி சரணே. ௯

வேர்வந்துறமாசூர்தர வெயினின்றுழல்வாரு
மார்பம்புதைமலி சீவரமறையாவருவாரு
மாரம்பர்த முரைகொள்ளன் மினண்ணாமலை யண்ணல்
கூர்வெண் மழுப்படையானலகழல் சேர்வது குணமே ௰

வெம்புந்திய கதிரோனொளி விலகும் விரிசார
லம்புந்திமூவெயிலெய்தவ னண்ணாமலையதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுண் ஞான
சம்பந்தனதமிழ் வல்லவரடிபேணு தறவமே.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருநேரிசை.

### திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்க டூவியுமையவள் பங்காமிக்க
சோதியே துளங்குமெண்டோட் சுடர் மழுப்படையினானே
யாதியே யமரர்கோவே யணியணாமலையுளானே
நீதியானின்னை யல்லானினையுமா நினைவிலேனே. க

பண்டணை வென்றவின்சொற் பாவையோர் பங்கநீல
கண்டனே கார்கொள் கொன்றைக்கடவுளே கமலபாதா
வண்டனே யமரர்கோவேயணியணாமலையுளானே
தொண்டனே னுனையல்லாற் சொல்லுமா சொல்லிலேனே உ

உருவமுமுயிருமாகி யோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைப்பிறப்பு வீடாய் நின்ற வெம்பெருமான்மிக்க
வருவிபொன் சொரியுமண்ணாமலை யுளாயண்டர் கோவே
மருவினின்பாதமல்லான் மற்றொருமாடிலேனே. ௩

பைம்பொனே பவளக்குன்றே பரமனேபால் வெண்ணீறா
செம்பொனே மலர்செய்பாதா சீர்தருமணியேமிக்க
வம்பொனே கொழித்து வீழுமணியணாமலையுளானே
யென்பொனே யுன்னையல்லாலேது நானினைவிலேனே ௪

பிறையணி முடியினானே பிஞ்ஞகா பெண்ணோர்பாகா
மறைவலா விறைவா வண்டார் கொன்றையாய் வாமதேவா
வறைகழலமரரேத்து மணியணாமலையுளானே
யிறைவனே யுன்னையல்லாலியாது நானினைவிலேனே ௫

புரிசடை முடியின்மேலோர் பெருபுனற் கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக் கருதியகாலகாலா
வரிகுலமலிந்த வண்ணாமலையுளாயலரின்மிக்க
வரிமிகுவண்டுபண் செய்பாத நான்மறப்பிலேனே. ௬

இரவியுமதியும் விண்ணுமிருநிலம் புனலுங்காற்று
முரகமார்பவன மெட்டுந்திசை யொளியுருவமானா
பரவுமிழ்மணிகொள சோதியணியணாமலையுளானே
பரவுநின்பாத மல்லாற்பரமநான் பற்றிலேனே ௭

பார்த்தனுக்கன்று நல்கிப்பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும் புலவுகங்கை நெடுமுடி நிலாவவைத்தா
யார்த்துவந்தீண்டு கொண்டலணியணாமலையுளானே
தீர்த்தனே நின்றன்பாதத்திறமலாற்றிறமிலேனே. ௮

பாலுநெய் முதலாய்மிக்க பசுவிலேந்தாடுவானே
மாலுநான் முகனுங்கூடிக்காண்கிலாவகையுணின்ற
பாலுநீர்கொண்டல் பூகமணியண்ணாமலையுளானே
வாலுடைவிடையாயுனறன் மலரடிமறப்பிலேனே. ௬

இரக்கமொன்றியாது மில்லாக்காலனைக்கடிந்தவெம்மா
னுரத்தினால் வரையையூக்கவொருவிரனூன்றியிறலே
யரக்கனை நெரித்தவண்ணாமலையுளாயமரரேறே
சிரத்தினால் வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே. ௭

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலை என்னும் பதிற்பிறந்தலால் அருணகிரியார் என்ற திருநாமம் புனைந்து வளர்ந்து சிவாலயத்தின் முன்பாங்கருள்ள கோபுரக் குமாரமூர்த்தியை உபாசனை புரிந்து கடாக்ஷம் பெற்று அந்தஸ்தலத்திற்திருவாய் மலர்ந்தருளிய சுவாமிகளின்

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசனொடு ஞானமொழிபேசுமுக மொன்றே
கூறுமடியார்வினைகள் தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமானபொருணீயருளல் வேண்டும்
ஆதியருணாசலமமர்ந்த பெருமானே. ௧

தனனதனனத் தனனதனனத்
தனனதனனத் — தனதான

அருமாதனைப் பொருவாள் கயல்குத்
தயிலார் நயனக் கொடியார்தம்
அழகார்தனநற்புழுகார்ச்சிலைத்
தனையாவலிகெட் டடல்தாழ
இருமாநடைபுக் குரைபோயுணர்வற்
றிளையாவுளமுட் குயிர்சோர
எரிவாய் நரகிற் புகுதாதபடிக்
கிருபாத மெனக் கருள்வாயே
ஒருமால் வரைபட்டிரு கூறிடவுற்
றொருவேறனைவிட் டெறிவோனே
யுறமான்மறவக் குறமாமகளுக்
குருகாவிருபொற் புயவீரா

திருமால்கமலப் பிரமா விழியிற்
றெரியாவானுக் கரியோனே
செழுநீர் வயல்சுற்றருணை புரியிற்
றிருவீதியினிற் பெருமாளே உ

தானதன தானத்த தானதன தானத்த
தானதன தானத்த தனதான

ஆலுமயில் போலொத்த கோதையாகளேமெத்த
வாரவட மேலிட்ட முலைமீதே
யானதுகிலேயிட்டு வீதிதனிலே நிற்கு
மாமைநடையாரிக்கு மொழியார்பால்
மாலொடவர் போகத்திலே குலவியே கித்தம்
வாடுமெனை நீசித்த மகிழ்வாகி
மாகமுக டாருக்ரவேகமயிலேயுற்று
வாழ்வுபெற வேமுத்தி தருவாயே
நாலுமுகவேதற்கு மாவிலையில்மாயற்கு
நாடவரியார் பெற்ற வொருபாலா
நாகமுடி மீதுற்றஞால ரதிலே பத்தர்
ஞானமுனிவோர்கட்கு மிறையோனே
வேலைவிழிவேடிச்சி யோடமர மாதொக்க
வீறருணைமால்வெற்பி லுறைவோனே
வீரமுட னேயுற்ற சூரர்கிளை வீழ்விக்க
வேலைமிகவேவிட்ட பெருமாளே ௩

தானதத்த தந்த தானதத்த தந்த
தானதத்த தந்த தனதான

தோதகப்பெரும்ப யோதரத்தியங்கு
தோகையர்க்கு நெஞ்ச மழியாதே
சூலைவெப்படர்ந்த வாத பித்த மென்று
சூழ்பிணிக்குணங்க ளணுகாதே
பாதகச்ச மன்றன் மேதியிற் புகுந்து
பாசம் விட்டெறிந்து பிடியாதே
பாவலர்க்கிரங்கி நாவினுக்கிசைந்த
பாடன்மிக்க செஞ்சொ றரேனும்
வேத மிக்க விந்து நாதமெய்க்கடம்ப
வீரபத்ரகந்த முருகோனே
மேருவைப்பிளந்து சூரனைக்கடிந்து
வேலையிற்றுளைந்த கதிர்வேலா

கோதை பொற்குறிஞ்சி மாதுகச்சணிந்த
கோமளக்குருமபை புணர்வோனே
கோவமுற்று யர்ந்த சோண வெற்பிலங்கு
கோபுரத்தமர்ந்த பெருமாளே ௪

தனதனத் தானனத் தனதனத் தானனத்

தனதனத்தானனத் — தனதான

கயல்விழித் தேனெனைச் செயலொழித் தாயெனக்
கணவகெட்டேனெனப் பெருமாது
கருதுபுத் ராவெனப் புதல்வராப் பாவெனக்
கதறிடப் பாடையிற் றலைமீதே
பயில் குலத் தாரழப் பழையநட் பாரழப்
பறைகள் கொட்டாவரச் சமனாரும்
பரியகைப் பாசம்விட் டெறியுமப் போதெனைப்
பரிகரித் தாடலைத் தாவேணும்
அயிலிடைச் சேவல்கைப் பரிதரத் தோகையுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே
அமராத் தாசிறுக்குமரிநட் பாகனத்
தரியசொற் பாவலர்க் கெளியோனே
புயலிளைப் பாறுபொற் சயிலமெய்ச் சாரலிற்
புனமறப் பாவையைப் புணர்வோனே
பொடிபடப் பூதரத் தொடுகடற் சூரனைப்
பொருமுழுச் சேவகப் பெருமாளே ௫

தானதன தானத்தான தனதானத்

தானதன தானத் — தந்ததான

ஆலவிழிநீலத் தாலதரபானத்
தாலளகபாரக் கொண்டலாலே
யாரநகையால் விற்போலுநுதலால்வித்
தாரநடையால்வற் கொங்கையாலே
யாலமயலாகிக் காலதிரிசூலத்
தாவிறுகு பாசத் தம்பினாலே
தாழ்வினுயர் பாழ்பட்டேழ் வினைவிடாமற்
சாகுமுனினேவற் கொண்டிடாதோ
சோலைதருகானிற் கோலமறமானைத்
தோளினுறவாகக் கொண்டவாழ்வே

சோதிமுருகாநித் தாமழயஞாலச்
சோணகிரி வீதிக் கந்தவேளே
பாலககலாபக் கோமளமயூரப்
பாகவுமைபாகத் தன்குமாரா
பாதமலர்மீதிற் போதமலர் தூவிப்
பாடுமவர் தோழநற் றம்பிரானே ௬

தனனதன தானதத்த தனனதன தானதத்த

தனனதன தானதத்த — தனதான

முழுகிவட வாமுகத்தி லெழுகனலி லேபிறக்கு
முழுமதிநி லாவினிற்கு மசையாலும்
மொழியுமட மாதருக்கு மினியதனி வேயிசைக்கு
முதியபத ராசனுக்கு மழியாதே
புழுகுதிகழ் நீபமத்தி லழகியகுரா நிரைத்த
புதுமையினி லாதிரட்டி புயமீதே
புணரும்வகை தானினைத்த கணரும்வகை நீலசித்ர
பெருமயிலி லேறிநித்தம் வரவேணும்
எழுமகர வாழிசுற்று பொழிலநணை மாநகர்க்கு
ளெழுதரிய கோபுரத்தி லுறைவோனே
இடைதுவள வேடுவச்சி பவளவித ழேதுடிப்ப
விளமுலைவி டாதசித்ர மணியார்பா
செழுமதிய நாகமொய்த்த வொழுகுபுனல் வேணிவைத்த
சிவனைமுக லோதுவித்த குருநாதா
திசைமுகன் முராரிமற்று மரியபல தேவருற்ற
சிறையடைய மீளவிட்ட பெருமாளே ௭

திருச்சிற்றம்பலம்.

சம்பூரணம்.

18/671 சென்னை-600 ...

வேலுமயிலுந் துணை.

7A
10-21